JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **33/2014** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 3** | Prosecution /Defence / Court | |
| Name | **Balamurugan** | Village | Perundurai |
| Father's Name | **Narasimman** | Taluk | |
| | | Age | |

**Accused present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 23.09.2025.**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு டையிங் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது ஆகும். 07.10.2013 ம் தேதியன்று படம் பார்த்து விட்டு இரவு 2.00 மணிக்கு பெருந்துறை அரசு கிளை கருவூலம் அருகில் வந்த போது பெருந்துறை போலீசார் மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தார்கள். சாட்சியாக என்னை இருக்க கேட்டுக் கொண்டதின் பேரில் நான் பார்வை மகஜரில் கையெழுத்து செய்தேன். **பார்வை மகஜர் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** எனக்கு தற்போது 33 வயது ஆகும். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் எந்த தியேட்டருக்கு படம் பார்க்க சென்று வந்தேன் என்றால் குன்னத்தூர் ரோட்டில் உள்ள தேவி சித்ரா திரையரங்குக்கு சென்று படம் பார்த்து திரும்பி வந்தேன். நான் சம்பவ சமயத்தில் பவானி ரோட்டின் அருகே குடியிருந்தேன் என்றால் சரிதான். நான் என்ன படத்திற்கு சென்றேன் என்றால் தற்போது நினைவில் இல்லை. சம்பவ சமயத்தில் என்ன வேலை செய்தேன் என்றால்

வேலைக்கு எதுவும் செல்லவில்லை. தேவி சித்ரா திரையரங்குக்கு குன்னத்தூர் நால் ரோட்டிலிருந்து இடது புறம் சென்றால் பவானி ரோடு செல்லலாம் என்றால் சரிதான். அந்த வழியாக செல்வது தான் என் வீட்டுக்கு செல்வதற்கு பக்கம் என்றால் சரிதான். நான் அந்த வழியாக வர வேண்டிய அவசியம் இல்லை. போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.ஆ. 1 ல் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. சம்பவத்தை பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு முன்பாக வைத்து கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். நான் காவல் நிலையத்தின் கையிருப்பு சாட்சி என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை.**

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை